**தமிழகத்துக்கும் ஈழத்துக்கும் ஓர் உரையாடல்** --

**இந்திரன்**: ஜெயபாலன், நீங்க எழுதி வந்த காலகட்டத்துல உங்களது சமகாலத்தவர்களாக யார் யார் முக்கியமாக எழுதிக்கிட்டிருந்தாங்க?

ஜெயபாலன்: இரண்டு முக்கியமான போராட்டம் முகிழ்த்து வந்த காலம் அது. ஒன்று சிங்களப் பேரினவாத அரசுக்கு எதிரான கலகக் குரல். இரண்டாவது தமிழர்களுக்குள் இருக்கிற சாதி ஒடுக்குதலுக்கு எதிரான கலகக் குரல். இந்த இரண்டு குரல்களும் எழுந்து நின்ற காலம். 60-களில் - ஓரளவுக்கு நிறைய வரலாற்றுச் சம்பவங்கள் இடம் பெற்ற காலமாகத்தான் அது இருந்தது. அந்த காலகட்டங்களில் இந்தியாவிலேயும் குறிப்பாகக் கேரளா, வங்காளம் போன்ற பகுதிகளிலும் சில கிளர்ச்சிகளும், இலக்கியத்தில் முன்மாதிரியான சில வளர்ச்சிப் போக்குகளும் இருந்தன என்பதை என்னைவிட நீங்கள் அதிகமாக அறிவீர்கள். இது எங்களிடம் பாதிப்பை ஏற்படுத்தியது. தேசியவாத அணி...

இ: இது எந்த ஆண்டுகள்ல?

ஜெ: 60 கள்ல... தேசியவாத இலக்கிய அணி ஒன்றும் பாரதிதாசன் போன்றவர்களை அடியொற்றி எழுந்தது. உள்ளார்ந்த சாதி ஒடுக்குதலுக்கு எதிரான ஓர் இடதுசாரி அரசியலை மற்றொரு அணியினர் முதன்மைப்படுத்திக் கொண்டிருந்தார்கள். அந்த அணியில் முருகையன், தேசிய அணியில் மஹாகவி, கல்கி அனந்தன், நீலாவாணன்...

இ: நீங்க இதைச் சொல்லும்போது தமிழ்நாட்டிலே எப்படி இருந்ததுன்னு யோசிச்சு பார்க்கிறேன். இங்கேயும் ரெண்டு போக்குகள் இருந்திருக்கு. 60, 70-களிலே தமிழகத்தில் தீவிரமான தமிழ் மொழி உணர்வு தோன்றியது. திராவிட இயக்கத்தினுடைய கலை இலக்கியச் சிந்தனை, மொழி

அரசியலை ஆதாரமாகக் கொண்டிருந்ததுதான் இதற்குக் காரணம். ஆனால் பெரியாரிடம் இருந்து விட்டு, பிறகு அவரிடமிருந்து விலகி வந்து பொதுவுடைமை இயக்கத்துக்குள் தீவிரமாக இயங்கிய ப. ஜீவானந்தம் போன்றவங்ககூட தமிழ் உணர்வோடுதான் இருந்தாங்க. ஜீவா 60-களில் தொடங்கிய ‘தாமரை’ இதழில்கூட சங்க இலக்கியம், சிலப்பதிகாரம் போன்றதையெல்லாம் வர்க்கப் பார்வையோட பாராட்டத்தான் செய்தார். ஆனால் ஒரு முக்கியமான தாவல் ஏற்பட்டது. திராவிட இயக்கத்துக்காரர்கள் பழந்தமிழ் இலக்கியம் காட்டிய சமூகத்தை, ஒரு குறையும் இல்லாத மகத்துவமான சமூகமாகக் காட்டியபோது, கம்யூனிஸ்டுகள் அந்த இலக்கியங்கள் காட்டும் சமூகம் வர்க்கப் பார்வையில் எத்தகைய குறைபாடுகளைக் கொண்டிருந்ததுன்னு பேசினாங்க. இதுதான் .

